# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | சுவாமி விபுலானந்தர்: ஓர் அறிமுகம் | 7 |
| 2. | கல்வி | 13 |
| 3. | ஆசிரியர் மயில்வாகனம் | 17 |
| 4. | விரிவுரையாளர் பண்டிதர் மயில்வாகனம் | 20 |
| 5. | அதிபர் பண்டிதர் மயில்வாகனம் பி.எஸ்.சி | 21 |
| 6. | ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கம் | 24 |
| 7. | பத்திரிகை ஆசிரியராக பிரபோத சைத்தன்யர் | 27 |
| 8. | சுவாமி விபுலானந்தா | 30 |
| 9. | இலங்கையில் ஸ்ரீ இராமக்கிருஷ்ண சங்கப் பாடசாலைகள் | 32 |
| 10. | சிவானந்த வித்தியாலயம் | 35 |
| 11. | இந்துக் கல்வி முறையில் | 38 |
| 12. | அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் | 41 |
| 13. | 'பிரபுத்த பாரத'த்தின் ஆசிரியர் | 44 |
| 14. | 'மதங்கசூளாமணி' என்னும் ஒரு நாடகத்தமிழ் நூல் | 46 |
| 15. | இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் | 50 |
| 16. | 'யாழ்நூல்' அரங்கேற்றம் | 52 |
| 17. | ஒரு வரலாறு முடிந்தது | 59 |

# 1

# சுவாமி விபுலானந்தர்: ஓர் அறிமுகம்



நமது இலங்கைத் தீவிலே தமிழுக்காகவும், சமயத்துக் காகவும் சமூகநலனுக்காகவும் அளப்பரிய சேவை யாற்றியவர்கள் பலர். அவர்கள் செய்த சேவையின் நிமித்தம் மக்கள் மனங்களிலே நிலைத்து வாழ்கின் றார்கள். அவர்களைப் பற்றி நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். அவர்களைப் பின்பற்றி இவ்வுலகில் வாழவேண்டும். அதுதான் எங்களது அவாவாகும். அதனடிப்படையில் சுவாமி விபுலானந்தரை உங்களுக்கு அறிமுகம் செய்கின்றேன்.

சுவாமி விபுலாநந்தரைப் பற்றிப் பலர் தங்கள் அறிவுக்கெட்டிய வரை எழுதியுள்ளார்கள். சிலர் தெரிந்திருந்தும் எழுதாது விட்டார்கள். எனது உள்ளத் தில் சுவாமி விபுலாநந்தர் ஆற்றிய பணிகளை நினைந்து நெக்குருகி இருக்கிறேன். அவரைப் பற்றி எனது சிற்றறிவுக்கு எட்டியவரை எழுதத் துணிந்தேன். அவரை நான் நேரில் பார்த்தது இல்லை. ஆனால் அவரால் எழுப்பப்பட்ட கல்விக்கூடத் தில் வாழ்ந்து கற்கக்கூடிய வாய்ப்புக் கிட்டியது. அவர் வாழ்ந்த அந்தப் புண்ணிய வளாகத்தில் கிடந்து புரளக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. அவரது எழுத்துக் களைப் படித்துச் சுவைக்கும் பாக்கியம் பெற்றேன்.

இந்தப் படத்தில் இருப்பது யாரென்று சொல்ல முடியுமா? இவர்தான் சுவாமி விபுலானந்தர். வித்தகன் விபுலானந்தர் என்று புகழ்ந்து கூறுவார்கள். கருவில் திருவுடையான் என்றும் அழைப்பார்கள். நீங்கள் அடிக்கடி பாடுவீர்களே ஒரு

பாடல். நினைவிருக்கிறதா? அதை இயற்றிய பெருமைக்குரியவர் சுவாமி விபுலானந்தர்தான். அவரது பாடலைக் கீழே தருகிறேன். ஒருமுறை படித்துப் பாருங்கள்.


'வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மா மலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது'.

பாடும்போது சுவைக்கின்றதா? இந்தப் பாடலை நமது விபுலானந்த அடிகள்தான் பாடினார். சுவாமி விபுலானந்தரின் இளமைப் பெயரை அறிந்திருப்பீர்கள். மயில்வாகனம் என்பதுதான் அந்தப் பெயர். அவரைப் பற்றி அறிய ஆவலாய் இருக்கிறீர்கள் அல்லவா? வாசித்துப் பார்ப்போமா?

சுவாமி விபுலானந்தரின் இளமைக் காலம் பொன்னானது. தாயின் அரவணைப்பில் இன்பம் கண்டவர். தந்தையின் பாசத்தில் திளைத்தவர். கிராமச் சூழலில் சிறுவர்களோடு விளையாடித் திரிந்தவர். காரைதீவுக் கடற்கரை மணலில் துள்ளித்திரிந்தவர். வயல்நிலங்களில், வாய்க்கால் வரம்புகளில் காலாற நடந்து மகிழ்ந்தவர். இயற்கையை நன்றாக இரசித்தவர். காரைதீவுக் கடற்கரையில் சூரிய உதயத்தைக் கண்டு மெய்சிலிர்த்தவர். பின்னாளில் தமிழுக்கும், சமயத்துக்கும் அளப்பெரிய சேவை செய்தவர். அவரைப் பற்றி சிறுவர்களாகிய நாம் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகின்றது.

## மட்டக்களப்பு


இலங்கையில் ஒன்பது மாகாணங்கள் உள்ளன. அதிலொன்று கிழக்கு மாகாணம். கிழக்கு மாகாணத்தில் முன்னர் இரண்டு மாவட்டங்கள்தான் இருந்தன. ஒன்று மட்டக்களப்பு. அடுத்தது திருகோணமலையாகும். மட்டக்களப்பு மாவட்டத்தை மீன்பாடும் தேன் நாடு என்று அழைப்பார்கள். திருகோணமலையைப் பாடல் பெற்ற திருத்தலம் என்றழைப்பார்கள். மட்டக்களப்புக்கு அதன் நீண்ட வாவி இயற்கை அழகை ஊட்டுகிறது. திருகோணமலைக்கு அதன் இயற்கைத் துறை முகம் அழகூட்டுகிறது. மட்டக்களப்பு வாவி மட்டக்களப்பை இருகூறுகளாக்கி

படுகிறன. அதன் ஈர்க்கு விளக்குமாறு செய்ய உதவுகிறது. ஈர்க்கில் கட்டு முற்றத்தைப் பெருக்க உதவுகிறது. தேங்காயை உரித்தால் உரிமட்டை வரும். உரிமட்டை தும்புகளைக் கொண்டுள்ளது. தும்பு கயிறு இழைக்க உதவுகிறது. தும்புத்தடி செய்ய உதவுகிறது. தேங்காயிலிருந்து தேங்காய் எண்ணெய் எடுக்கப்படுகிறது. முற்றிய மரங்கள் வீட்டுக் கைமரங்களாக வீடு கட்டப் பயன்படுகின்றன.

அக்காலத்தில் கிராமத்தின் தலைமகனாக விதானையார் விளங்கினார். அவர் தான் கிராமத்தின் சிற்றரசன். பேரும் புகழும் விதானையாருக்கு இருந்தது. மதிப்பும் மரியாதையும் இருந்தது. விதானையார் அரசாங்கத்தின் பிரதிநிதியாகச் செயற்படுபவர். காரைதீவில் சின்னத்தம்பியின் மகனாக சாமித்தம்பி விளங்கினார். அவர் சிறந்த குணமுடையவர். அதேபோல் இராசகோபாலன் பிள்ளையின் மகளாக கண்ணம்மை வாழ்ந்தார். கண்ணகி வழிபாட்டில் கண்ணம்மை சிறந்து விளங்கினார்.

சின்னத்தம்பியும் இராசகோபாலன்பிள்ளையும் தமது பிள்ளைகளுக்குத் திருமணம் செய்து வைத்தார்கள். இல்லறம் சந்தோசமாகக் கழிந்தது. பத்துத் திங்கள் பறந்தோடியது. இத்தம்பதியினருக்கு 1892 ஆண்டு மார்ச் 27ஆம் திகதி ஆண்குழந்தை பிறந்தது. 'மயில்வாகனம்' எனப் பெயரிட்டனர். வீட்டில் தம்பிப்பிள்ளை என்று அழைத்தார்கள். குழந்தை வளர்ந்துவரும் நாளில் உடல்நலக்குறைவு ஏற்பட்டது. கதிரகாமக் கந்தனுக்கு நேர்த்திவைத்தார்கள்.



சுவாமி விபுலானந்தர் பிறந்த வீட்டின் தோற்றம்

குழந்தைக்கு நலமாகியது. குழந்தையோடு கதிர்காமம் சென்றார்கள். அங்கே குழந்தையை மீண்டும் 'மயில்வாகனம்' எனப் பெயரிட்டனர். மயில்வாகனம் என்றே அழைத்தார்கள். பாலூட்டித் தாலாட்டி வளர்த்தார்கள். மயில்வாகனனுக்கு இரு சகோதரிகள் இருந்தார்கள். ஒருவரின் பெயர் கோமளவல்லி. மற்றவரின் பெயர் மரகதவல்லி.

மட்டக்களப்பு மாவட்டம் பத்தினித் தெய்வ வழிபாட்டில் பெருமை மிக்கது. கண்ணகிக்குக் கோயில்கள் அதிகம் உள்ளன. காரைதீவுக் கிராமத்திலும் கண்ணகிக்குக் கோயில் உண்டு. ஆண்டுதோறும் சிறப்பாக உற்சவம் நடைபெறும். உற்சவ காலத்தில் மக்கள் பயபக்தியாக இருப்பார்கள். கண்ணகி வழக்குரை காதை பாடப்படும். மக்கள் பெருந்திரளாகக் கூடிக் கொண்டாடுவார்கள். விதானையாரின் மேற்பார்வையில் உற்சவம் நடக்கும். மயில்வாகனம் கோயிலுக்குப் போவான். கண்ணகி வழக்குரை காதையில் மூழ்கி ரசிப்பான். சிலப்பதிகாரத்தை நன்கு அறியக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது.

# 3

# ஆசிரியர் மயில்வாகனம்

1908ஆம் ஆண்டு அவரது பதினாறு வயதில் கேம்பிறிஜ் பரீட்சையில் வெற்றி பெற்றார். சிறப்பாகச் சித்தியெய்திய மயில்வாகனத்தை சென் மைக்கல் கல்லூரி ஆசிரியர் பதவி கொடுத்துக் கௌரவித்தது. பயிலுநர் ஆசிரியராகப் பதவியினைத் தொடர்ந்தார். 1909 முதல் இரண்டு ஆண்டுகள் ஆசிரியராகக் கடமையாற்றினார். ஆசிரியர் எப்போதும் படித்துக் கொண்டிருக்க வேண்டும். அவர் தொடர்ந்து படித்துக் கொண்டே இருந்தார். 1911ஆம் ஆண்டு அவரால் மறக்கமுடியாத ஆண்டாக இருந்தது. தனது அன்னையை இழந்தார். அந்தச் சோகம் அவரை வாட்டியெடுத்தது. அதனால் கல்முனை புனித மரியாள் பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றார்.

ஆசிரியராய் இருப்பவர்கள் அத்துறையில் பயற்சியினைப் பெற்றிருக்க வேண்டும். அப் பயிற்சியைப் பெறவிரும்பினார். மகரகமை ஆசிரிய பயிற்சிக் கல்லூரி உட்புகுமுகத் தேர்வை எழுதினார். பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பயிற்சியின்போது அங்கே விரிவுரையாளராகக் கடமையாற்றிய தென்கோவை கந்தையாபிள்ளையிடம் பழந்தமிழ் இலக்கியங்களையும், தமிழ் இலக்கணத்தையும் பயின்றார். இரண்டாண்டுக் கால ஆசிரியர் பயிற்சியின்போது பல விடயங்களைக் கற்றறிந்தார். அத்துடன் கொழும்பில் பல நல்லறிஞர்களின் நட்பையும் பெற்றார்.

ஆசிரியர் பயிற்சியின்போது இலங்கை அரசினரால் பெருமதிப்புப் பெற்ற கலைச்செல்வராகிய கைலாசபிள்ளை முதலியார் அவர்களைச் சந்தித்துச்

# 5

## அதிபர் பண்டிதர் மயில்வாகனம் பி.எஸ்.சி

அவரது மொழிப் புலமையையும் ஆற்றலையும் வழக்கறிஞர் திருவிளங்கத்தார் அறிந்தார். திருவிளங்கத்தார் மானிப்பாய் தந்த மூதறிஞர். திருப்புகழுக்கு உரையெழுதியவர். அவர் மானிப்பாயில் இந்துக்கல்லூரியின் முகாமையாளராக இருந்தார். மயில்வாகனனின் சிறப்பு அவரை ஈர்த்தெடுத்தது. மானிப்பாய் இந்துக்கல்லூரி சிறந்ததொரு அதிபரைத் தேடிக் கொண்டிருந்தது. அதற்குத் தகுதியுடையவர் மயில்வாகனம்தான் என்று முகாமையாளர் தீர்மானித்தார். மயில்வாகனத்தினால் தனது கனவு நிறைவேறும் என நினைந்தார்.

பண்டிதர் சா. மயில்வாகனம் பி.எஸ்.சி

அந்தப் பதவி புனிதமும் உயர்வும் அடையும் என்றெண்ணினார். மயில் வாகனத்தை அணுகி தனது விருப்பத்தை எடுத்தியம்பினார். மயில்வாகனமும் மறுக்காது அதிபர் பதவியை ஏற்றுக் கொண்டார். மயில்வாகனனின் தலை மையில் மானிப்பாய் இந்துக்கல்லூரி ஏற்றம்பெற்றது. விஞ்ஞானக் கல்விக்கு ஆய்வுகூடம் அவசியம் என வலியுறுத்தினார். அதனை நிறுவும் முயற்சியில் இறங்கி ஆய்வு கூடத்தை நிறுவினார். சதாசிவ ஐயர் தமிழ் மொழி வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் உழைத்தவர்.

பண்டிதர் மகாலிங்கசிவம் ஆகியோருடன் சேர்ந்து ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தைத் தொடங்கினார். அதற்கெனப் பாடத்திட்டத்தையும்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இசை பற்றிய ஆராய்ச்சியினை மேற்கொண்டு, சென்னைப் பல்கலைக்கழகத்தில் இசை பற்றிய விரிவுரைகளை நடத்தி, இலங்கைப் பல்கலைக்கழகத்தில் யாழ்நூலாக வடிவமைத்தார். தமிழர் இசை பற்றி ஆராய்ந்து கண்ட முடிபுகளைக் கட்டுரைகளாக்கி பத்திரிகைகளில் வெளியிட்டு வந்தார். செந்தமிழ், தமிழ்ப்பொழில் ஆகிய இதழ்களில் கட்டுரைகள் வெளிவந்தன. தமது பன்னிரண்டு ஆண்டுகள் தொடர்ந்து செய்த ஆராய்ச்சியின் கண்ட முடிபுகளை யாழ்நூலாக எழுதிமுடித்தார்.

1943ஆம் ஆண்டு ஆனி மாதம் யாழ்நூலை எழுதி முடித்துவிட்டார். அதனைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத்துக்கு அனுப்பி விட்டார். இரண்டாம் உலகப்போர் போன்ற இடர்களினால் நூல் அச்சிடும் பணிகள் தாமதமாகின. அது 1947இல் தான் முடிவுற்றது. தனது மாணவர்களில் ஒருவரான வெள்ளைவாரணனார் யாழ் நூலுக்குச் சிறப்புப் பாயிரமும் எழுதி, கையெழுத்துப் படிகளை எழுதியும், ஒப்பு நோக்கியும் உதவி புரிந்ததையும் விபுலாநந்த அடிகள் குறிப்பிட்டுள்ளார். கரந்தைத் தமிழ்ச் சங்கம் அரங்கேற்றம் செய்வதற்குரிய ஆயத்தங்களைச் செய்தது.

